சீராகக் கூடிச் சிறக்கக் குழாமிருந்து
பேராக நன்மொழிகள் பேசலுற்ரு ரம்மானை
திருமா லிமையோர்க்குச் செப்புவது ஆதிசிவன்
கருவா லழிப்பதல்லால் காசினியிற் சூரர்களை
விழி யாயிரத்தோனே மேவலரே கேட்டிடுவீர்
பழிவாங்க வேணுமென்ருல் பரமன் தவமழிப்போம்
என்னத் திருமா லிமையோ ரடிபணிந்து
உன்னையல்லால் வேறுதுணை ஒருவரு மில்லையென
தாமன் மனமகிழ்ந்து சத்தியுமை பாகனிடம்
காமனைத் தானனுப்பக் கருதலுற்ரு ரம்மானை
ஆதி மதனை அழைத்துச் சிவனிடத்தில்
மாது வடிவாக்கி மயக்குமென விடுத்தால்
வீரமது சிந்த விளங்கு மொருமதலை
சூரர்குலம் வேரறுத்து துலைக்குமிந்தப் பிள்ளைஎன்று
ஆலோசனையாய் அரி அயனுந் தேவர்களும்
வால மதனை வாவென் றருகழைத்து
பெண்களுக்கும் மேலான பேர்வடிவு நீரெடுத்து
கண்மூன் றுடையோனைக் கலைக்கவென விடுத்தார்
அப்போது காமன் அரிவை வடிவாகி
செப்பரிய ஈசரிடஞ் செல்வேனென நடந்தான்
கரும்பு வில்லைவளைத்துக் கருவண்டு நாணிப்பூட்டி
அரும்பு மலர்ப்பாண மெடுத்து நடக்கலுற்ருன்
வெண் கயிலைசென்று விமல னெதிராக
பெண் வடிவு கொண்டு பெய்தான் மலர்ப்பாணம்
மாரன் [illegible] தானும் மாதுவடிவான செய்தி
கூரான வேல்விழியிர் கூறக் கேளம்மானை
குமிழைப் பழித்ததனங் கொடியைப் பழித்தஉரு
கமழைப் பழித்தமனம் கயலைப் பழித்தவிழி
மயிலைப் பழித்தசாயல் மதியைப் பழித்தநுதல்
முகிலைப் பழித்தகுழல் முறுவைப் பழித்ததிறம்
கரும்பைப் பழித்தகரம் கதிரைப் பழித்தநிறம்
அரும்பைப் பழித்தமறு அரவைப் பழித்தகுறி
இலையைப் பழித்தஉந்தி இணையைப் பழித்தபதம்
சிலையைப் பழித்ததுபோற் சேடியுருவான மதன்
அன் றிலது போல்நடந்து அரனெதிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரடா வென்று பற்கடித்து வேலவரும்
சூர னுடலைத் துணிக்கச் சிலைவளைத்து
விட்டாரே பாணமது விண்ணதிர மண்ணதிர
பட்டு மடிந்தான்காண் பத்மா சூரனுந்தான்
ஏவுஞ் சரங்களெல்லாம் எண்ணரிய சூரர்களை
கூவி அழிக்கக் குறத்தலைகள் கூத்தாட
தாருகன் சிங்கமுகன் சண்முகனுர் தன்னுடனே
பாரேழ் நடுக்கமுறப் பற்கடித்து வில்வளைத்து
சேனை ஒருகோடி தேர்ப்பரிகள் முக்கோடி
யானை ஒருகோடி யாளிசிங்கந் தேர்கோடி
எல்லையில்லாச் சேனை இருபுறமுஞ் சூழ்ந்துவர
வில்லிற் கணைதொடுத்து விட்டான் அறுமுகற்கு
கோடைஇடி போற்சரங்கள் கொக்கரித்து முன்வரவே
வாடாமல் மால்மருகன் வடிவே லெடுத்தெறிந்தார்
அவுணர்குலம் வேரறுத்து அறுமுகனுர் கைதனிலே
மவுனமுடன் வந்து வடிவே லிருந்ததுகாண்
கூளி நரிநாய்கள் குறைத்தலையைத் தின்றிடும்
காளியொடுபேய்கணங்கள் களித்துமிக கொண்டாடும்
கோழி மயிலாகக் கொண்டெ ழுந்த சூர்தமை
வாழுங் கரக்கொடியும் வாகனமும் ஆக்கினராம்
நறுமலர்கள் தானெடுத்து நான்முகனுந் தேவர்களும்
பெருமழைபோல் கந்தருக்கு பெய்தார்கா ணம்மானை
தம்பட்ட மல்லாரி தாரைசின்னஞ் சங்கசைய
கும்பிட்டார் வானவர்கள் கூத்தாடினுர் மகிழ்ந்தார்
பேழமொலிக்க விண்ணவர்கள் தான் செழிக்க
வேழமுகதது விநாயகரைத் தான் போற்ற
சாக்கியனுர் தான்மகிழ்ந்து சண்முகனை முத்தமிட்டு
நீக்கினீர் தேவசிறை நீடூழி வாழுமென்ருர்
அன்னேரங் காங்கையரும் அண்ணுவென வணங்கி
மண்ணுசை கொண்ட வல்லசுரர் தங்களையான்
சமரில் அழித்தேனே தானவர்கள் கண்டுதொழ
அமரருக்கு வேண்டும் அரியவரம் நீயளிப்பீர்
என்று வடிவேல ரியம்புமந்த வேளையிலே
கண்டு வரங்கொடுத்தார் கனிஉகந்த கற்பகமும்
வாங்கினுர் தேவர் மகிழ்ந்தா ரடிபணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கு புகழுயர உன்கிருபை தாருமென்று
பாகசாதனன் றனக்குப் பட்டமது கட்டுதற்கு
நாகமதில் துயிலும் நாரணனும் வேதாவும்
சுரருடனே வேலோனுந் தொழுது கணபதியை
சிரமகுடஞ் சாற்றித் தேவரெல்லாங் கொண்டாடி
திட்டமுட னுண்டு தேவர்களைக் காருமென்று
பட்டந் தரித்தார்காண் மாமிந்திர லோகமதை
மாசகற்றி வைத்தார் வடிவேல ரம்மானை
பூசுரனுங் கந்தரைத்தான் போற்றிசெய்து ஓதலுற்றார்
வானுலகம் வாழ யாதுமையாள் தான்மகிழ
மானுள்தெய்வானை தனை மன்றல்செய்வீரென் றுரைத்
மலரோ னுரைகேட்டு வடிவேல ரப்பொழுது [தார்
அலர முகம்பாரத்து அகமகிழ்ந்தா ரம்மானை
தேவர் கோன்றானுஞ் செந்தில்வடி வேலவரை
ஆவலுடன் பார்த்து அறைவா ரொருவசனம்
என்மகளை மன்றல்செய்தால் ஈரேழு லோகமெல்லாம்
உண்மையுடன் வாழுமென்று ஓதி அடிபணிய
கரியமால் தன்மருகன் கந்தர் மனமகிழ்ந்து
அரிவை தெய்வானைதனை அழையுமென்றா ரம்மானை

விருத்தம்

இந்திர னீன்ற மாதை இமையவ ரெனவை செய்து
அந்தரக் கங்கை ஆட்டி அறுமுகற் கவைய மாக்கிச்
சுந்தரக் கிரண சோதி துலங்கவே தூசி நீக்கி
கந்தனை மணமே செய்யக் கலைமக ளெனவே வந்தாள்.

நடை

ஸ்மையை விழிக்கெழுதி மார்பிற் பதக்கமிட்டு
கையிற் கடையமிட்டுக் காதுக்குக் கம்மல்வைத்து
கொண்டை முடித்துக் குலாவுந் துயிலுடுத்தி
தண்டை சிலம்பணிந்து தாதிமார் தற்சூழ
கண்டோர் களிகூறக் கந்தவேளும் மகிழ
செண்டு கர்த்திலங்க தெய்வானை அம்மனுந்தான்
சொர்ன நவமுத்துத் துலங்கு ரத்னமாலையிட்டு
அன்ன நடைநடந்து ஆவேந்திரன் மகளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

